ISSN - 2235-9796


16 பக்கங்கள் 30/-

# Valai வலை

சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்

சிலந்தி - 03 | ஓகஸ்ட் - 2014 | இழை - 35




13



போய்வா... மகேல 09

GLASGOW 2014
XX COMMONWEALTH GAMES
14

வாசக நெஞ்சங்களுக்கு...!

வலையின் இதழ் 35 ஆவது இழையில், உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி சௌக்கியமாக இருக்கிறீர்களா?

இன்று இணையத்தளங்களிலும், பத்திரிகைகளிலும் கொடிய 'எபோலா' வைரஸ் பற்றிய செய்திகள் வந்தவண்ணமுள்ளதை நாம் தினசரி பார்க்கின்றோம். எமது நாட்டையும் அது வந்தடையுமா என்றுகூட எம் மத்தியில் அச்சம் நிலவுவதையும் காண்கிறோம்.

எம்மூர்களில் எம்மத்தியில் கோடை காலங்களில் வந்து போகும் வெப்ப நோய்கள் அதிலும் பொக்குழிப்பான் அம்மை நோய்களை நாம் சந்தித்திருக்கின்றோம். எனினும் இந்த எபோலா உயிரை எடுக்கும் கொடிய வைரஸ் நோயாகும்.

மேற்கு ஆபிரிக்கா நாடுகளிலிருந்து இலங்கை வரும் வெளிநாட்டவர்கள் தொடர்பாகவும், இலங்கையர் தொடர்பாகவும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் அவசியமாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது, இலங்கையின் சுகாதார சேவையின் வளர்ச்சி போதுமானதல்ல. எந்தவொரு தொற்றும் பெரும் அழிவை ஏற்படுத்தலாம். இதனைக் கருத்தில் கொண்டு எமது சுகாதாரத்துறை நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இலங்கையின் சுகாதார அமைச்சு இந்த நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் நிற்காமல் மக்கள் மத்தியில் இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வரவேண்டும்.

இந்த இதழ் தொடர்ந்து வெளிவருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...

நன்றி.

- 'வலை' வீசல் தொடரும்...

சி.என்.எச்.சாள்ஸ்
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...




- ✧ ஓகஸ்ட் - 01 - உலக தாய்ப்பால் தினம்
- ✧ ஓகஸ்ட் - 03 - உலக நண்பர்கள் தினம்
- ✧ ஓகஸ்ட் - 06 - உலக ஹிரோஷிமா தினம்
- ✧ ஓகஸ்ட் - 09 - உலக நாகசாகி தினம்
- ✧ ஓகஸ்ட் - 12 - உலக இளைஞர் தினம்
- ✧ ஓகஸ்ட் - 13 - உலக இடதுகைப் பழக்கமுடையோர் தினம்
- ✧ ஓகஸ்ட் - 18 - உலக உள்நாட்டு மக்களின் தினம்
- ✧ ஓகஸ்ட் - 19 - உலக புகைப்படப் பிடிப்பாளர் தினம்
- ✧ ஓகஸ்ட் - 19 - உலக மனிதாபிமான தினம்
- ✧ ஓகஸ்ட் - 21 - உலக நாகரிக தினம்
- ✧ ஓகஸ்ட் - 30 - உலக காணாமற் போனோர் தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ அதிசிறந்த ஆய்வாளரும், பிரபல எழுத்தாளருமான ஒருவர் அண்மையில் (31.07.2014) காலமானார். அவர் யார்?
'சாரல் நாடன்' (கலாபூஷணம் கருப்பையா நல்லையா) (வயது-70)
'சி.வி.வேலுப்பிள்ளை' 'காலஓட்டம்', 'மலையக வாய்மொழி இலக்கியம்', 'மலைக்கொழுந்தி', 'மலையகம் வளர்த்த தமிழ்' போன்றன இவர் எழுதிய நூல்களில் சிலவாகும்.

❒ 2014 ஆம் ஆண்டுக்கான ஆசிய அரசியல் கட்சிகளின் 8 ஆவது சர்வதேச மாநாடு இந்த முறை எங்கு நடைபெறவுள்ளது?
கொழும்பில் (2014 செப்ரெம்பர் 18-21 வரை நடைபெறவுள்ளது)
கடந்த வருடம் மே மாதம் சீனாவின் ஷனிக்ஸ் மாநிலத்தில் நடைபெற்றது.

❒ இறக்குமதி செய்யப்படும் அனைத்து பால்மா வகைகள் மற்றும் ஐஸ்கிறீம் வகைகளின் மாதிரிகளை தொடர்ந்தும் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது. அப்பரிசோதனை எது?
டி.சி.டி.

❒ அண்மையில் நடைபெற்ற க.பொ.த. 2014 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் எத்தனை பேர்?
2 இலட்சத்து 96 ஆயிரத்து 313 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர்.
- இதில் பாடசாலை பரீட்சார்த்திகள் 2 இலட்சத்து 192 பேர்
- தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 62 ஆயிரத்து 116 பேர்

❒ அண்மையில் நடைபெற்ற புலமைப்பரிசில் - 2014 பரீட்சைக்குத் தோற்றிய

மாணவர்கள் எத்தனை பேர்?
3 இலட்சத்து 35 ஆயிரத்து 585 பேர், 2 ஆயிரத்து 870 பரீட்சை நிலையம்.

❒ அண்மையில் காலமாகிய ஜனாதிபதியின் பிரபல சட்டத்தரணி யார்?
பென் இளையதம்பி (வயது-74)

❒ நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு மாலைதீவின் பொலிஸ் மா அதிபர் கொழும்பு வந்தார். அவர் யார்?
ஹுசேன் வஹீட்

❒ சூழலியல் நீதி தொடர்பான தெற்காசிய நீதித்துறை வட்ட மேசை மாநாடு அண்மையில் எந்த நாட்டில் நடைபெற்றது?
கொழும்பில்

❒ "கல்வித்தரத்தின் மேம்பாடு மற்றும் அதற்கான ஆதரவு" பிரிவில் விருதும், "சுகாதாரத்துறையில் அக்கறை" பிரிவில் சான்றிதழும் கிடைக்கப்பெற்ற வங்கி எது? கொமர்ஷல் வங்கி

❒ குழந்தைகளின் விருப்பத்துக்குரிய பிரபல 3 ஜங்கிள் காட்டூன் தொடரைத் திரைப்படமாக எடுக்கவுள்ள நிறுவனம் எது?
டிஸ்னி, 2015 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 9இல் திரைக்கு வருமென அறிவிக்கப்பட்டுள்ளது.

❒ அண்மையில் ஏற்பட்ட நிலச்சரிவினால் ஒரு கிராமமே மண்ணில் புதைந்தது. அது எந்த நாட்டில் நடைபெற்றது?
நேபாளம்

❒ பாரிய நில நடுக்கத்தினால் 400இற்கும் மேற்பட்டோர் இறந்தும், 1400 இற்கு மேற்பட்டோர் காயமடைந்த சம்பவம் எந்த நாட்டில் நடைபெற்றது?
சீனாவில்

❒ இலங்கை மத்திய வங்கியின் கீழ் உள்ள வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை இணைக்கும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் முதல் 7 மாதங்களில் மத்திய வங்கியின் நாணயச் சபையானது எத்தனை இணைப்புத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது?
19

❒ வெங்காயம், உருளைக்கிழங்கு மீதான இறக்குமதி வரியை அரசு அண்மையில் அதிகரித்தது. அது எவ்வளவு?
வெங்காயம் - 15 /-
உருளைக்கிழங்கு - 10/-
15.08.2014 முதல் அமுலுக்கு வருகிறது.

❒ இலங்கைக்கு உரித்தான மீனினம் ஒன்று தற்போது அழிவடைந்து வருவதாக இலங்கையின் மிருகக்காட்சிசாலை கூறியுள்ளது. அந்த மீனத்தின் பெயர் யாது?
'டங் கின்சியா சிறிலங்கன் சிஸ்'
சிங்களத்தில் இவ் மீனினத்தை "தங்குடா பெதியா" என அழைக்கின்றனர்.

❒ யாழ்.ரயில் நிலையப் புனரமைப்புக்கென 85 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியுள்ள வங்கி எது?
இலங்கை வங்கி

❒ இலங்கையில் கௌரவத்துக்குரிய வங்கியாக 10 ஆவது ஆண்டாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள வங்கி எது?
கொமர்ஷல் வங்கி

❒ இலங்கை வங்கி இந்த வருடம் (2014) எத்தனையாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது?
175 ஆவது
- வியாபார மையங்கள் - 14
- கிளைகளின் எண்ணிக்கை - 619
- ATM - 530
- வெளிநாட்டுக் கிளைகள்
  - சென்னை
  - மாலைதீவு
  - சீசெல்ஸ்
- 1939 இல் நிறுவப்பட்டது
- 1949 இல் அதன் முதலாவது கிளையை லண்டனில் ஆரம்பித்தது.

❒ 'யூரோமணி' சஞ்சிகையினால் வழங்கப்படும் இந்த வருடத்திற்கான இலங்கையின் தலைசிறந்த வங்கி எது?
சம்பத் வங்கி

❒ இலங்கை பெற்றோலிய வளத்துறை அமைச்சு சுப்பர் டீசலுக்குப் பதிலாக அறிமுகப்படுத்தியுள்ள புதிய டீசலின் பெயர் என்ன?
சுப்பர் டீசல் 4 ஸ்டார்

❒ அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பிரதி அமைச்சர்கள் யார்?
- பி.திகாம்பரம் - தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர்.
- பிரபாகணேசன் - தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரதியமைச்சர்

❒ இணையப் பாதுகாப்பு உச்சி மாநாடு இந்த முறை எங்கே நடைபெற்றது?
கொழும்பில்

- ❒ உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பதில் ஆணையாளர் நாயகமாக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
  **ஆர்.எம்.ஆர்.டபிள்யு. மஞ்சநாயக்க**

- ❒ வடமாகாண விவசாயம், கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் கடந்த இரண்டு மாத காலத்தில் அழிக்கப்பட்ட பார்தீனியம் எத்தனை கிலோ?
  **ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 634 கிலோ ஆகும்.**

- ❒ ஐக்கிய அமெரிக்க குடியரசில் அமைந்துள்ள சர்வதேச பொது ஆணைக் குழுவினால் (Joint Commission International) இலங்கை உலகத் தரம் வாய்ந்த சுகாதார பராமரிப்பு நிறுவனமென உத்தியோகபூர்வமாக அங்கீகரித்து சான்றுப்படுத்தப்பட்ட மருத்துவமனை எது?
  'டேர்டன்ஸ்' (Durdans Hospital)

- ❒ மறைந்த மலையக இலக்கியத்தின் முன்னோடி எழுத்தாளர் ஒருவருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அனுதாபம் தெரிவித்து செய்தி வெளியிட்டார். அந்த எழுத்தாளர் யார்?
  **கலாபூஷணம் சாரல் நாடன் (சி.நல்லையா)**

- ❒ அண்மையில் இலங்கை வந்த தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப் புக்கான கூட்டமைப்பின் புதிய செயலாளர் நாயகம் யார்?
  **அர்ஜீன் பகதூர் தாபா**

- ❒ உலகில் மிகவும் அதிக மின் கட்டணம் அறவீடு செய்யும் நாடுகளின் வரிசையில் இலங்கை எததனையாவது இடத்தில் உள்ளது?
  **2 ஆவது (முதலாவது இத்தாலி ஆகும்)**

- ❒ இனி வருங்காலங்களில் எத்தனை ரூபா நாணயத்தினை அச்சிடுவதில்லை என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது? **10 ரூபா**

- ❒ இ.போ.சபைக்கு கடன் அடிப்படையில் 2 ஆயிரம் பேருந்துகளை இலங்கை எந்த நாட்டிடமிருந்து கொள்வனவு செய்யவுள்ளது?
  **இந்தியாவிடம்**

## இலங்கையில் இன்று இவர்கள்...

- ⌖ இலங்கையின் தபால் மா அதிபர் யார்?
  **டி.எல்.பி. ரோஹன அபயரத்ன**

- ⌖ கொமர்ஷல் வங்கியின் புதிய தலைவர் யார்?
  **தர்மதீரசிங்க**

⌖ இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் யார்?
மேஜர் ஜெனரல் குவாஷிம் குவாரெஷ

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

◇ காஸா மீதான தாக்குதலின் எதிரொலியாக இஸ்ரேல் ஒரு "தீவிரவாத தேசம்" என்று பிரகடனம் செய்த நாடு எது?
பொலிவியா

◇ 'காஸா' விவகாரம் குறித்து அண்மையில் ஊடகம் ஒன்றின் முன் பேசிய ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய அதிகாரி ஒருவர் கதறி அழுதார். அவர் யார்?
கிறிஸ் கின்னஸ்

◇ நடுக்கடலில் அண்மையில் கப்பலொன்று கவிழ்ந்து 20 பேர் பலியாகிய சம்பவம் எந்த நாட்டில் நடைபெற்றது?
லிபியாவின் தலைநகர் திருப்போலியின் கடலில்

◇ எரிவாய்வுக் குழாய் வெடித்து 20 பேர் பலியாகியும், 270 பேருக்கு மேல் காயமடைந்த சம்பவம் அண்மையில் எந்த நாட்டில் நடைபெற்றது?
தாய்வான் தென்மேற்குப் பகுதியில் உள்ள கலோசியுங் நகரத்தில்

◇ நாசா நிறுவனம் அண்மையில் உருவாக்கிய மிகச் சக்திவாய்ந்த தொலைக் காட்டி எத்தனையாம் ஆண்டு விண்ணுக்கு ஏவப்படவுள்ளது? அதன் பெயர் என்ன?
**2018, 'Atlast'**

◇ ஜப்பானில் அண்மையில் ஏற்பட்ட புயலினால் 10 பேர் பலி, பலர் படுகாய மடைந்தனர். அப்புயலின் பெயர் என்ன?
'ஹலாங்'

◇ உலகில் இன்றுவரை அதிகூடிய வயதானவர் என கின்னஸ் சாதனை படைத்தவர் யார்?
சகாரி மமோயி (வயது-111, ஜப்பான்)

◇ 2080 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி பூமியைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்துமென விஞ்ஞானிகளால் எதிர்வு கூறப்பட்டிருக்கும் விண்கல்லின் பெயர் என்ன?
**1950 DA**

◇ காந்தி படத்தை இயக்கிய பிரபல ஆங்கில பட இயக்குநர் அண்மையில் காலமானார். அவர் யார்? றிச்சர்ட் அட்டன்பரோ (வயது-90)

◇ அமெரிக்க ஜனாதிபதி பராக் ஓபாமா மீது வழக்கு தொடுக்கவுள்ள தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள பாராளுமன்றம் எது?
அமெரிக்க பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபை

◇ பிரித்தானியாவின் முதலாவது முஸ்லிம் பெண் அமைச்சர் ஒருவர் காஸா தொடர்பான அரசின் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது பதவியை இராஜனாமாச் செய்தார். அவர் யார்?
பரோனெஸ் சயீடா வர்ஸி

◇ ஜப்பானிய ஹிரோஷிமா நகரின் மீது அமெரிக்கா அணுகுண்டு தாக்குதலை நிகழ்த்திய நினைவு தினம் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. இது எத்தனையாவது நினைவு தினம்?
69 ஆவது

◇ ஐரோப்பிய விண்வெளி முகவர் நிலையத்தின் விண்கலமொன்று 67பி/சர்யுமோவ் - ஜெரஸி மென்கோ என்ற வால் நட்சத்திரத்திற்கு மிகவும் அருகில் சென்று அதனைப் பல்வேறு கோணங்களில் படமெடுத்தது. அந்த விண்கலத்தின் பெயர் என்ன?
ரொஸேதா
வால் நட்சத்திரமொன்றை பின்தொடர்ந்து சென்ற விண்கலமொன்று புகைப் படமெடுத்தது விண்வெளி வரலாற்றில் இதுவே முதற்தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

◇ 2040 இல் உலகம் முழுவதும் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவும் எனக்கூறிய ஆய்வாளர்கள் யார்?
டென்மார்க் நாட்டின் ஆர்ஹஸ் பல்கலைக்கழகம், அமெரிக்காவின் வெர்மண்ட் சட்டப் பாடசாலை மற்றும் சி.என்.ஏ (கடற்படை பாதுகாப்பு மையம்) ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்களே தாம் மேற்கொண்ட ஆய்விலிருந்து மேற்படி விடயத்தினைத் தெரிவித்துள்ளனர்.

◇ இலங்கை எந்த நாட்டுடன் விமான சேவைக்கான வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது? போலந்து

◇ கூகுளின் யூரியூப் பகுதி ருவீச் தளத்தை வாங்கிய நிறுவனம் எது?
கூகுள் (Google)

◇ பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க பெண்களுக்கு மட்டும் என புதிய ரயில் சேவையைத் தற்போது ஆரம்பித்துள்ள நாடு எது?
தாய்லாந்து

◇ சக்திவாய்ந்த நில நடுக்கத்தினால் அண்மையில் 381 இற்கு மேற்பட்டோர் பலியாகிய சம்பவம் எந்த நாட்டில் நடைபெற்றது?
சீனாவின் யுனான் மாகாணத்தில்

◈ தென்னாபிரிக்காவில் இயங்கும் ஆலோசனை நிறுவனம் ஒன்றால் நடத்தப்பட்ட ஆய்வின்படி கோடீஸ்வரர்கள் அதிகளவில் வாழும் நகரம் எது?
**லண்டன்**

◈ ஒஸ்கார் விருது பெற்ற பிரபல ஹொலிவூட் நடிகர் அண்மையில் மர்மமான முறையில் சாவடைந்தார். அவர் யார்?
**ராபின் வில்லியம்ஸ்**

◈ 25 ஆண்டுகளுக்குப் பின்னர் அண்மையில் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் தனது முதலாவது ஆசிய விஜயமாக எந்த நாட்டுக்குப் பயணமானார்?
**தென்கொரியா, இதேவேளை பாப்பரசர் ஒருவர் தென்கொரியா செல்வது இதுவே முதலாவது முறையாகும்.**

◈ அதிநவீன செய்மதியை சீனா அண்மையில் வெற்றிகரமாக ஏவியது. அந்த ஏவுகணையின் பெயர் என்ன?
**காவோபென்-2**

◈ கின்னஸ் சாதனை படைத்த உலகின் மிக உயரமான மனிதன் அண்மையில் காலமானார். அவர் யார்?
**லியோனிட் ஸ்டாட்னிக் (வயது-44, உக்ரைன்)**

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

◎ பொலிவியா நாட்டின் ஜனாதிபதி யார்?
**எலோ மொராலஸ்**

◎ மேற்குலக நாடுகளின் உணவு இறக்குமதிக்கு தடை விதித்துள்ள நாடு எது?
**ரஷ்யா**

◎ நான்கு நாடுகளின் பெண்களைத் திருமணம் செய்வதற்கு சவூதி அரேபிய ஆண்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகள் எவை?
- **பங்களாதேஷ்**
- **பாகிஸ்தான்**
- **மியான்மார்**
- **சாட்**

◎ மலேசியாவின் முன்னணித் தமிழ்க் கவிஞர்களில் ஒருவர் அண்மையில் காலமானார். அவர் யார்?
**கவிஞர் சீனிறைனா முகம்மது**

◎ இரண்டாவது தடவையாகவும் தெரிவாகியுள்ள கொலம்பியா நாட்டின் ஜனாதிபதி யார்? **ஜுவன் மாவேல் சந்தோஸ்**

◎ கம்போடியாவில் யுத்தக் குற்றங்களுக்காக ஆயுள் தண்டனை விதிக்கப் பட்டுள்ள கமரூஜ் தலைவர்கள் யார்?
- நுவென் சியா (வயது-88)
- கியபு சம்பான் (வயது-83

◎ அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் யார்?
விக்ரம் குமார் துரைச்சாமி

◎ துருக்கி நாட்டின் புதிய ஜனாதிபதி யார்?
ரெசெப் தயிப் எர்டோகன்

◎ தாய்லாந்தின் தற்போதைய புதிய பிரதமர் யார்?
பிரயூத் சான் ஓச்சா (இவர் அந்நாட்டின் முன்னாள் இராணுவத் தளபதியாவார்)

◎ இந்தியாவின் புதிய இராணுவத் தளபதி யார்?
தல்பிர் சிங்

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற கிரிக்கெட் வீரர் யார்?
ஜக் கலிஸ் (தென்னாபிரிக்கா - சகலதுறை ஆட்டக்காரர்)

⊙ சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ள தென்னாபிரிக்க அணி வீரர் யார்?
ஜெக்பூஸ் காலிஸ்

⊙ ‘உலகக் கிண்ணக் கனவு சரிவராது என்பதை இலங்கையில் வைத்து உணர்ந்தேன்’ என சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற கிரிக்கெட் வீரர் கூறினார். அந்த வீரர் யார்?
ஜக் கலிஸ்

⊙ நடந்து முடிவடைந்த உலக உதைபந்தாட்டப் போட்டியில் அதிக கோல்களை அடித்த ஜேர்மனி வீரர் அண்மையில் தனது ஓய்வை அறிவித்தார். அவர் யார்?
மிரோஸ்லவ் குளோஸ்

⊙ சர்வதேச உதைபந்து களத்துக்கு விடை கொடுத்த வீரர் யார்?
சாவி ஹெர்னன்டெஸ்

⊙ தனது 17 வருட கிரிக்கெட் டெஸ்ட் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வந்து ஓய்வுபெற்றுச் சென்ற இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர் யார்?
மஹேல ஜெயவர்த்தன

- ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடும் கிரிக்கெட் வீரர்களுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்குவதற்கு தனது பாராளுமன்றத்தில் சட்டமூலம் கொண்டு வந்துள்ள நாடு எது?
  நியூஸிலாந்து

- பலஸ்தீனத்துக்கு ஆதரவான வாசகங்கள் அடங்கிய கைப்பட்டியை அணிந்து விளையாட ஐ.சி.சி. தடை விதித்த இங்கிலாந்து அணி வீரர் யார்?
  **மொயீன் அலி**

- டெஸ்ட் தொடர் ஒன்றில் இலங்கையில் அண்மையில் விளையாடிய ஒரு நாட்டு அணி 21 வருடங்களின் பின்னர் இலங்கையை வெற்றி கொண்டது. அந்த அணி எது?
  **தென்னாபிரிக்கா அணி**

- பாகிஸ்தானின் கிரிக்கெட் சபையின் புதிய தலைவர் யார்?
  **ஷகரியர் கான்**

- சீனாவில் நடைபெறவுள்ள சர்வதேச இளையோர் ஒலிம்பிக் போட்டியில் 'எபோலா' நோய் அச்சுறுத்தல் காரணமாக விலகியுள்ள நாடுகள் எவை?
  சியராலியோன், **லைபீரியா**

- இணையத்தினையும், ரசிகர்களையும் கலக்கி வரும் 17 வயது கரப்பந்தாட்ட வீராங்கனை யார்?
  சபீனா அல்டின் (கஸகஸ்தான்)

- கிரிக்கெட் விளையாட்டில் 90 முறை டக் அவுட் ஆகாமல் விளையாடி உலக சாதனை படைத்த வீரர் யார்?
  கிறிஸ் கெய்ல் (மேற்கிந்தியத் தீவு)

- சர்வதேச கால்பந்து தர வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ள அணி எது?
  ஜேர்மனி, இதேவேளை இந்தியா 150 இடத்தைப் பிடித்துள்ளது.

- ஒன்பது இலக்குகளை ஒரே இனிங்ஸில் கைப்பற்றியதன் மூலம் புதிய சாதனையைப் படைத்த வீரர் யார்?
  ரங்கண ஹேரத் (இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர்)

## அயல் நாட்டுப் பக்கமாக வீசிய வலையில்....

- 16 ஆண்டுகள் வளர்த்த நேபாள இளைஞரை அவனது பெற்றோரிடம் பிரதமர் மோடி ஒப்படைத்தார்.
  அந்த இளைஞனின் பெயர் என்ன?
  ஜூத் பகதூர் (வயது-26)

⊙ சிறந்த பாராளுமன்ற உறுப்பினர்களெனத் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்ட உறுப்பினர்கள் யார்?
- அருண் ஜேட்லி
- கரணிசிங்
- சரத் யாதவ்

⊙ கிளாஸ்கோவில் நடைபெற்ற 20ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம் பெற்றுக் கொடுத்தவர் யார்?
அன்தனி சுதேஷ் பீரிஸ்

⊙ 2100 ஆண்டுகள் பழமைவாய்ந்த ஆடம்பரக் கல்றை எந்த நாட்டில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது?
சீனாவின் ஸுயி நகரில்

⊙ அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் 40 ஆபிரிக்கத் தலைவர்களுக்குமிடையில் 3 நாள் உச்சி மாநாடு எங்கு நடைபெற்றது.
வாஷிங்டனில்

⊙ பிரபல பொலிவுட் நடிகரின் மெழுகுச்சிலை அமெரிக்காவில் அண்மையில் திரைநீக்கம் செய்யப்பட்டது. அவர் யார்? அமிதாப்பச்சன்

⊙ இந்த மாத ஆரம்பத்தில் (01.08.2014) இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்ட அமெரிக்க இராஜாங்கச் செயலர் யார்?
ஜோன் ஹெரி

⊙ உலகில் முதன் முறையாக மீன்களுக்கான மருத்துவமனையை ஆரம்பிக்கவுள்ள நாடு எது? இந்தியா

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ 2013 ஆம் ஆண்டின் சிறந்த பெண் முயற்சியாளருக்கான விருது கிடைக்கப்பெற்ற பெண்மணி யார்?
திருமதி தயானா சந்துரு
(தலைவர், The World Navigators prt (LTD), யாழ்ப்பாணம்)

இதேவேளை வல்லாரை, பீற்றூட், கரட் ஆகியவற்றில் அப்பளம் தயாரிப்பு உற்பத்தியாளருக்கான விருது முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிருஸ்ணதாஸ் சாயிராணி என்பவருக்கு கிடைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

❖ உலகப் புகழ்பெற்ற பீல்ட்ஸ் மெடல் என்ற பதக்கத்தை வென்ற உலகின் முதலாவது பெண்மணி யார்? மரியம் மிர்சாகனி
இவர் மிகவும் சிக்கலான கேத்திர கணிதச் சிக்கல்களை தீர்த்து வைத்தார்.

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

⌗ இலங்கையில் மிகப் பழைய தலைநகரம் எது?
பொலநறுவை

⌗ பாக்கு நீரிணையை முதலில் நீந்திக் கடந்த முதலாவது தமிழர் யார்?
நவரத்தினசாமி

⌗ ஆறு கடலோடு கலக்கும் இடம் எது?
சுழிமுகம்

⌗ உணவின்றி 5 ஆண்டுகள் உயிர்வாழ முடியுமென ஆச்சரியமூட்டும் தகவலைக் கூறியுள்ள இலங்கையர் யார்?
கிர்பிடிலேனர் ரோலி

⌗ "சோர்விலாச் சொல்"
அமைச்சர் பசீர் சேகுதாவூத் 1991 - 2011 வரை நாடாளுமன்றில் ஆற்றிய உரையின் தொகுப்பே இதுவாகும்.

⌗ ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான நாணயம் எது?
யூரோ

⌗ வன்னியை ஆட்சி செய்த கடைசி தமிழ் மன்னன் யார்?
வன்னியன்

⌗ இலங்கையில் கோப்பிச் செய்கை கைவிடக்காரணம் யாது?
கோப்பித் துருநோய்

⌗ முதலாவது சோதனைக் குழாய்க் குழந்தை யார்?
லூயிஸ் பிரவுண்

---

❒ காணாமற்போனவர்கள் தொடர்பிலான முறைப்பாடுகள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட 3 சட்ட மேதைகள் யார்?

- சேர் டெஸ்மன் டி சில்வா
- சேர் ஜெப்ரி நைஸ்
- பேராசிரியர் டேவிட் எம்.கிரேன்

இதேவேளை, நான்காவது நிபுணராகஇந்தியாவின் மனிதவுரிமை செயற் பாட்டாளர் அவ்தாஷ் கௌஷல் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரை வெளிவரவில்லை.

# உலகை மிரட்டும் எபோலா (Ebola) ...

- 1976 இல் உலகை மிரட்டி பல பேரைப் பலியெடுத்தது. (இதுவரை 1500 இற்கு மேற்பட்டோர் பலி)
- இந்த வைரஸ் தற்போது 38 வருடங்கள் கழித்து தற்போது மீண்டும் பலரைப் பலியெடுக்கத் தொடங்கியுள்ளது.
- இந்த வைரஸைக் கட்டுப்படுத்த முடியுமே தவிர அழிக்க முடியாது.
- எயிட்ஸ் வைரஸை விட 50 மடங்கு பேராபத்தைத் தரக்கூடியது.
- இந்த ரைவஸ் ஒருவரைத் தாக்கினால் 7-8 நாட்களில் நிச்சயம் இறந்து விடுவார்.
- இதன் தாக்கம் ஆபிரிக்கா நாட்டின் நைஜீரியாவில் தொடங்கியது. 1976 இல் ஆபிரிக்காவின் சையர் நாட்டின் 'எபோலா' ஆற்றங்கரையில் இது முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

**இதன் அறிகுறிகள்**

- நரம்புகளைத் தாக்கி வெளிப்புறத் தோளில் ஓட்டைகளை உண்டாக்கும்.
- காய்ச்சல், உடல் தளர்ச்சி, வயிற்று வலி, தலைவலி, வாந்தி போன்ற அறிகுறிகள் உடனே இருக்கும்.
- தோல் பழுதடைந்து சதைகள் சுருங்கிப்போய் வயதானவர்கள் போல் நோயாளியாகி பின்னர் இறப்பார்கள்.

- எபோலா வளியால் பரவுவதில்லை. இது இரத்தம் மற்றும் உடலுறவு மூலமே பரவுகின்றது எனக் கூறப்படுகிறது.
- உயிராபத்து விளைவிக்கக்கூடிய எபோலா என்கிற வைரஸ் தாக்கத்தினால் 1201 இற்கு மேற்பட்டவர்களைக் காவு கொண்ட நாடு சியராலியோ ஆகும் தற்போது அந்த நாட்டில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த நோய் ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் உள்ள லைபீரியா, நைஜீரியா, சியாராலியோன், கினியா உள்ளிட்ட நாடுளிலும் பரவி வருகின்றது.
- எபோலா நோய்க்கு பல மருந்து மாதிரிகள் பரிசோதனையில் இருக்கின்றன. இப்பொழுது ஸ்மாப் (Zmapp) என்ற ஒரு மருந்து மட்டுமே சற்று பயன ளிப்பதாக உள்ளது எனக் கூறப்படுகிறது.
- இவ் வைரஸ் பாதிக்கப்பட்டுள்ள மேற்கு ஆபிரிக்க நாடுகளிலிருந்து வருபவர்களுக்கு தனது நாட்டுக்குள் நுழைவதற்கு தென்னாபிரிக்கா தடை விதித்துள்ளது.
- எபோலா நோயாளர்களை மறைத்து வைத்தால் 2 வருட சிறைத்தண்டனையை என சியராலியோன் என்ற நாடு அறிவித்துள்ளது.
- 'எபோலா' வைரஸ் குறித்து இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

1. 24 மணி நேரமும் கண்காணிக்கப்படக்கூடியவாறு அவசர நடவடிக்கைப் பிரிவு

2. கட்டுநாயக்க விமான நிலையம் 24 மணி நேரமும் டாக்டர்கள் உஷார் நிலையில் வைக்கப்படுவர்.
3. நீர்கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இருந்து அம்புலன்ஸ் வண்டி, தாதிகள் உட்பட்ட குழுவினர் எந்நேரமும் தயாராக கடமையில் இருக்கும்.

---

## சீனாவில் பாரிய பூமியதிர்ச்சி...

- சீனாவின் தென்மேற்கு யுனான் பகுதியில் இடம்பெற்றது.
- 600 பேர் பலி
- 1800 இற்கு அதிகமானோர் காயம்
- 12 ஆயிரம் வீடுகள் முற்றாகச் சேதம்
- ரிச்டர் அளவு - 6.1
- மீட்புப் பணியில் 25 ஆயிரம் துருப்பினர்

---

## கொமன்வெல்த் – 2014 (Commonwealth Games in 2014)

- 20 ஆவது போட்டி ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்றது. (யூலை 23 - ஓகஸ்ட் 3 வரை - 12 நாட்கள் நடைபெற்றன.)
- இங்கிலாந்து பதக்கப்பட்டியலில் முதலிடம்
  - தங்கம் - 58, வெள்ளி - 59, வெண்கலம் - 57 மொத்தம் 174
  - கொமன்வெல்த் வரலாற்றில் 84 ஆண்டுகளுக்குப் பின் நான்கு தங்கம் வென்று சாதனை படைத்த இங்கிலாந்து வீராங்கனை - கிளாடியா
- ஈட்டி எறிதலில் ஆறாவது இடத்தைப் பிடித்துக்கொண்ட இலங்கை வீராங்கனை யார்?
  நதீகா லக்மாலி

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. இங்கிலாந்து | 58 | 59 | 57 | 174 |
| 2. ஆஸி | 49 | 42 | 46 | 137 |
| 3. கனடா | 32 | 16 | 34 | 82 |
| 4. ஸ்கொட்லாந்து | 19 | 15 | 19 | 53 |
| 5. இந்தியா | 15 | 30 | 19 | 64 |
| 6. நியூஸிலாந்து | 14 | 14 | 17 | 45 |
| 7. தென்னாபிரிக்கா | 13 | 10 | 17 | 40 |
| 8. நைஜீரியா | 11 | 11 | 14 | 36 |
| 9. கென்யா | 10 | 04 | 08 | 22 |

## இலங்கையில் நிர்வாக சேவை...

இலங்கை நிர்வாக சேவை இலங்கையின் முதன்மை அரச சேவையாகும். இச்சேவையின் பெருமைமிகு வரலாறு 1802 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகியது.

வருமான சேகரிப்பு மற்றும் நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணிக் காப்பதற்காக பிரித்தானிய அரசினால் இலங்கை சிவில் சேவை (CCS) நிறுவப்பட்டது.

பிரித்தானிய அதிகாரத்திலிருந்து மீண்டும் சுதந்திரம் பெற்றதன் பின்னர் இலங்கையின் சுதந்திரத்தினது தேவையின் நிமித்தம் இலங்கை சிவில் சேவையானது இலங்கை நிர்வாக சேவையாக (CAS) 1963 இல் மறுசீரமைக்கப்பட்டது.

1972 இல் இலங்கை குடியரசாகியதைத் தொடர்ந்து இச்சேவை ஸ்ரீலங்கா நிர்வாகசேவை (SLAS) எனப் பெயர்மாற்றம் பெற்றது.

நிர்வாக சேவையின் மேற்படி பெயர்மாற்றம் மற்றும் பண்புகளில் ஏற்பட்ட மாற்றங்கள் ஏதுவாயிருப்பினும், நாட்டின் உயர்விற்காக அதன் பங்களிப்பு வரலாறு பூராகவும் தொடர்ந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இலங்கை நிர்வாக சேவை பல்வேறு துறைகளில் தேர்ச்சி பெற்ற 2500 இற்கு மேற்பட்ட அரச துறை முகாமையாளர்களைக் கொண்டிருப்பதுடன், அவர்கள் உதவிப் பிரதேச செயலர்கள் தொடக்கம் அதிமேதகு ஜனாதிபதி செயலாளர் வரையான முக்கிய அரச பதவிகளை வகிப்பவர்களாகவும் திகழ்கின்றனர்.

மதிப்புமிக்க இரு நூற்றாண்டு வரலாற்றுடனும், சிறந்த வழி காட்டலுடனும் விளக்காக மிளிரும் பாதையில் இலங்கை நிர்வாக சேவை தனது "சேவை முதலில்" என்னும் கருப்பொருளின் அடிப்படையில் இலங்கைத் தாய்க்கும், அதன் மக்களுக்கும் தனது சேவையினைத் தொடர்ச்சியாக வழங்கி வருகிறது.

---

### உங்கள் பார்வையில் வலை...

உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.


## வேலைவாய்ப்பு படிவங்கள்

அரச வர்த்தமானியில் வெளிவருகின்ற அனைத்து வேலைவாய்ப்புப் படிவங்களும் என்னால் வெளியிடப்பட்டு வருகின்றன. அதனை யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

**சந்தா விபரம் - Delivered to Your Home**

Valai வலை
சமகால பொது அறிவுத் தொகுப்பு

உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road,Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



**50/- விலைக் கழிவுடன் வருடச் சந்தா 250/- மட்டுமே.**

## இலங்கையில் 3R செயற்றிட்டம் :

- நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றப் பிரிவில் விசேட திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்றிட்டத்தை அமுல்படுத்துவதற்கு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.
- இங்கு 3R என்பது

Reduce - கழிவுகளைக் குறைத்தல்
Re-Use - கழிவுகளை மீள் பாவனைக்கு உட்படுத்துதல்
Re - Cyde - கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல் ஆகும்.

மேற்படி இந்த மூன்று கருப்பொருளை மையமாகக் கொண்டதே **3R** திட்டமாகும்.

இங்கு முதற்கட்டமாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றப் பிரிவில் இருந்தும் தலா 200 குடியிருப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு இந்தத் திட்டம் அறிமுகம் செய்யப்படவுள்ளது.

தெரிவு செய்யப்படும் குடியிருப்பாளர்கள் மத்தியில் குழுக்கள் அமைக்கப் பட்டு **3R** செயற்றிட்டம் பற்றி விளக்கமளிப்பதற்கும், அதனை வெற்றிகரமாக அமுல்படுத்தி திண்மக்கழிவுப் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

— — — — — — — — — — — — — — — — — — — — — —

## இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு விபரம்..

ශ්‍රී ලංකා තැපැල්
இலங்கை அஞ்சல்
SRI LANKA POST

**(07.08.2014 முதல் அமுலில்...)**

- சாதாரண தபால் 5 ரூபாவில் இருந்து 10 ரூபா ஆக அதிகரிப்பு
- தபாலட்டை - 8 ரூபா, - பதிவுத்தபால் 35 ரூபா
- 20 கிராம் நிறை கொண்ட வியாபாரக் கடிதம் 15 ரூபா

(இதற்கு மேற்பட்ட ஒவ்வொரு கிராமுக்கும் 10 ரூபா)
250 கிராமுக்கு 90 ரூபா, 500 கிராமுக்கு 150 ரூபா அதிகரிக்கப்பட்டுள் ளது.



தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
**heyncharles@gmail.com**